# 7 குறள்வழி வாழ்வோம்



திருக்குறளானது தமிழில் வெளிவந்த உலகப் புகழ் பெற்ற அறநூல் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் 1330 குறள்கள் உள்ளன. ஒவ்வொரு குறளும் இரண்டு வரிகளில் அமைந்துள்ளது. இவை பத்துப் பத்துக் குறள்களாக 133 அதிகாரங்களின் கீழ்த் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால், திருக்குறளானது 'முப்பால்' எனவும் அழைக்கப்படுகின்றது. திருக்குறள், எந்தச் சமயமும் சாராது மனிதனுக்குத் தேவையான அறநெறிகளைச் சொல்கிறது. இதனால், திருக்குறள் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

## நன்றி மறவாமை

திருக்குறள் கூறும் கருத்துக்கள் இதிகாசக் கதைகள் ஊடாகவும் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் 'நன்றி மறவாமை' என்பது நாம்

கடைப்பிடிக்க வேண்டிய உயரிய பண்பாகும். ஒருவரால் செய்யப்பட்ட உதவியை மறவாது இருப்பதும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அன்புடன் அவருக்கு உதவுவதும் நன்றிமறவாமை ஆகும். இதையே ஔவையார் 'நன்றி மறவேல்' என்று ஆத்திசூடியில் கூறியுள்ளார். திருவள்ளுவர் நன்றி மறவாமை பற்றி 'செய்ந்நன்றி அறிதல்' எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''** என்ற குறளுக்கமைய மகாபாரதத்தில் கொடைவள்ளல் கர்ணன், நன்றிமறவாது வாழ்ந்து வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்விலே பங்குகொண்டபோது துரியோதனன் பக்கமிருந்து கர்ணனும் பங்கேற்றான். அப்போது அரச குருவான கிருபாச்சாரியார் கர்ணனை அரசகுலமற்றவன் என எள்ளிநகையாடினார். அவ்வேளை துரியோதனன் கர்ணனை அங்கதேச அரசனாக்கிக் கௌரவப்படுத்தினான்.

இந்நன்றியை மறவாத கர்ணன் தான் பாண்டவர்களின் மூத்த சகோதரன் என அறிந்த பின்பும் துரியோதனனுடன் இறுதிவரை துணையாக நின்று போராடி உயிர்நீத்தான். தான் சார்ந்த பக்கம் தர்மத்திற்கு விரோதமானது என அறிந்தும் நன்றிமறவாத பண்பிலிருந்து கர்ணன் ஒரு போதும் விலகவில்லை.

## பொறுமையுடைமை

எம்மிடம் காணப்படவேண்டிய உன்னதமான பண்புகளில் ஒன்று பொறுமை பேணுதல் ஆகும். நற்பண்புகளான அன்பு, அடக்கம், வாய்மை, சினங்கொள்ளாமை போன்ற அனைத்திற்கும் மேலானது பொறுமையாகும். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது ஆன்றோர் வாக்காகும். இதை வள்ளுவர் ' பொறுமையுடைமை' எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

**‘‘ஒறுத்தார்க்கு ஒரு நாள் இன்பம் பொறுத்தார்க்கு**
**பொன்றும் துணையும் புகழ்.’’** என்ற குறளுக்கமைய மகாபாரதத்தில் பொறுமைக்கு இலக்கணமாகத் தருமனின் வாழ்வு காட்டப்பட்டுள்ளது.

சகுனியின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியும் அரசையும் நாட்டையும் இழந்து கானகத்தில் வாழும் நிலை வந்தபோதும் மூத்தவனான தருமன் நிலைகுலையாது பொறுமை காத்தான். அவன் துரியோதனனாலும் அவனது சகோதரர்களாலும் பட்ட துன்பங்களைப் பொறுமையுடன் எதிர்கொண்டான். பொய்பேசாது, சினம் கொள்ளாது, நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தான். தருமனின் பொறுமையான ஒழுக்கமே தர்மத்தைக் காத்தது. இவ்வகையில் நாம் ஒவ்வொருவரும் பொறுமை எனும் பண்பினைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் பல வெற்றிகளை அடையலாம்.

## வாய்மை

சொன்னசொல் தவறாமை, வாய்மை எனும் ஒழுக்கங்களின் சிறப்பை ‘வாய்மை’ எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார்.

**‘‘உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்.’’** என்ற குறள் மூலம் உண்மையால் உயர்வு பெற்ற மன்னனான அரிச்சந்திரனின் கதை எமக்குப் படிப்பினை ஊட்டுவதாக அமைகின்றது.

அரிச்சந்திரன் மனுநீதி தவறாத அரசன். அவன் விசுவாமித்திர முனிவரிடம் கொடுத்த வாக்கிற்காகத் தனது நாட்டையும் அரசுரிமையையும் இழந்தான். மேலும், மனைவியையும் மகனையும் பிரிந்தான். சுடலைக் காவலாளியாகி ஈற்றில் மகனையும் இழந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்தான். ஆயினும் சொன்ன சொல் தவறாது சத்தியத்தைக் கடைப்பிடித்தமையால் இழந்தவைகளை மீண்டும் பெற்றுக் கௌரவமடைந்தான்.

இக்கதையில் அரிச்சந்திரன் மன்னராக இருந்தபோதும் எல்லாவற்றையும் இழந்து அடிமையானபோதும் சத்தியத்தைக் கைவிடாது வாழ்ந்தான். அரிச்சந்திரனது கதையை நாடகமாகப் பார்த்த மகாத்மாகாந்தி சத்தியத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வரலாற்றில் இடம்பிடித்தார்.

எனவே, நாமும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள நல்ல கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்றப்பழக வேண்டும். நன்றிமறவாமை, பொறுமை, உண்மை போன்ற நற்பண்புகளை இளமையிலேயே கடைப்பிடிக்கப் பழகுவோம்.

**அகராதிப் பயன்பாடு**




மறை -

கீர்த்தி -

ஆன்றோர் -

ஆற்றல் -

நன்றி -

மனு -

**பயிற்சி**

## 7.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. திருக்குறளின் சிறப்பு என்ன?
2. நன்றி மறவாமை பற்றி எந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது?
3. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கூறப் பட்டுள்ளது?
4. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நற்பண்புகளைக் கடைப் பிடித்தோர் யாவர்?
5. திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

## 7.2 கீழே தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு வாக்கியம் அமைப்போம்.

i. திருக்குறள் - ............................ ii. கர்ணன் - ............................

iii. பொறுமை - ............................ iv. நன்றி - ............................

v. சத்தியம் - ............................

## 7.3 சுய விபரப் படிவத்தை பூர்த்தி செய்து எழுதுவோம்.

1. முழுப்பெயர் :- ............................................................................
2. முகவரி :- ............................................................................
3. பிறந்த திகதி :- ...........................................வயது :-....................
4. தொலைபேசி இலக்கம் :-....................................................................
5. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை :- ............................................
6. கல்வி கற்கும் தரம் :- ............................................................................
7. கல்வி கற்கும் பாடசாலை :- ................................................................

## 7.4 சேர்த்தெழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 1. பால் + குடம் ..... | 2. கல் + குகை ..... | 3. பல் + பசை ..... |
| 4. பகல் + பொழுது ..... | 5. பொன் + குடம் ..... | 6. பொன் + சிலை ..... |
| 7. முள் + செடி ..... | 8. முள் + காடு ..... | 9. மக்கள் + பேறு ..... |
| 10. நாள் + காட்டி ..... | 11. வாள் + போர் ..... | 12. கண் + புலம் ..... |

## 7.5 அடைப்புக்குறியிலுள்ள மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து பந்தியைப் பூரணப்படுத்துவோம்.

நாங்கள் அனைவரும் (காலை / மாலை / இரவு) நேரம் நிலவின் ஒளியில் (குதூகலித்துக் / கவலைப்பட்டுக் / வெறுத்துக்) கொண்டிருந்தோம். அவ் வேளையில் வானத்தில் (கொக்கு / கிளிகள் / வெளவால்) கூட்டம் பறந்து சென்றது. அவற்றை (கேட்பதற்கு / பார்ப்பதற்கு / தொடுவதற்கு) வியப்பாக இருந்தது. வானத்தில் விண்மீன்கள் (பளபளவென, தகதகவென, குளுகுளுவென) மின்னின. தவளைகள் (இரைச்சல், கத்தும், சலசலப்பு) சத்தம் காதைத் துளைத்தது. இரவில் பூத்த மலர்கள் (கமகமவென, படபடவென, கலகலவென) நறுமணம் வீசின.